**சுருக்கம்**

தமிழர்த்திருநாள் தைப்பொங்கல் 2023 - அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசாக தலா 1 கிலோ பச்சரிசி மற்றும் 1 கிலோ சர்க்கரையுடன் ரூ.1000/- ரொக்கப்பணம் வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(டி1)த்துறை**

அரசாணை (2டி) எண். 84

நாள் 22.12.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது வருடம்
மார்கழி 7 ஆம் நாள்

**படிக்க:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண்.வர்த்8/044988/2022, நாள் 19.12.2022.

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழர்த்திருநாளாம் தைப்பொங்கலை தமிழர்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் வருகின்ற 2023-ஆம் ஆண்டு தைப்பொங்கலுக்கு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் தலா 1 கிலோ பச்சரிசி மற்றும் 1 கிலோ சர்க்கரையுடன் ரூ.1000/- ரொக்கப்பணம் வழங்கலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர், மேலும், 2023-ஆம் ஆண்டு தைப்பொங்கலை முன்னிட்டு மொத்தம் 2,19,33,342 பயனாளிகளுக்கு (அரிசி குடும்ப அட்டைதாரர்கள்- 2,19,14,073 + இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்கள்-19,269) தலா 1 கிலோ பச்சரிசி மற்றும் 1 கிலோ சர்க்கரையுடன் ரூ. 1000/- ரொக்கப்பணம்

(தபிபா)

ஆகியவற்றினை வழங்க தோராயமாக ரூ.2357/- கோடி செலவினம் ஏற்படும் என தெரிவித்துள்ளார். அதன் விபரம் பின்வருமாறு :-

| வ. எண் | பொருட்கள் | குடும்ப அட்டை ஒன்றுக்கு வழங்கப்படவுள்ள பொருட்களின் அளவு | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் கொள்முதல் விலை கிலோ ஒன்றுக்கு | குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கை | மொத்த செலவினத்திற்கான உத்தேச தொகை |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) = (4 x 5) |
| 1. | பச்சரிசி | 1 கிலோ | ரூ.35.20 | 2,19,33,342 | ரூ. 772053638/- |
| 2. | சர்க்கரை | 1 கிலோ | ரூ.39.27 (கொள்முதல் விலை ரூ.37.40 + போக்குவரத்து செலவினம் ரூ.1.87) | 2,19,33,342 | ரூ.86,13,22,340/- |
| 3. | ரொக்கப் பரிசு தொகை | குடும்ப அட்டை ஒன்றுக்கு | ரூ.1,000/- | 2,19,33,342 | ரூ.2193,33,42,000/- |
| | | | | மொத்தம் | **ரூ.2356,67,17,978/-** |

3. மேற்குறிப்பிட்ட பொங்கல் பரிசினை மொத்தம் 2,19,33,342 பயனாளிகளுக்கு (அரிசி குடும்ப அட்டைதாரர்கள் 2,19,14,073 + இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்கள்-19,269) வழங்குவதற்கு **ரூ.2356,67,17,978/-** நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யுமாறும், பொங்கல் பரிசில் குறிப்பிடப்பட்டுள்ள பச்சிரிசியை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் மூலமும் (NCCF), சர்க்கரையை தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் மூலமும் கொள்முதல் செய்திட அனுமதி அளிக்குமாறும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக கழக நிர்வாக இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

4, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக கழக நிர்வாக இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, 2023 ஆம் ஆண்டு தமிழர்த்திருநாளாம் தைப்பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடிட ஏதுவாக பொங்கல் பரிசு தலா 1 கிலோ பச்சரிசி மற்றும் 1 கிலோ சர்க்கரையுடன் ரூ.1000/- ரொக்கப்பணத்தினை மொத்தம் 2,19,33,342 பயனாளிகளுக்கு (அரிசி குடும்ப அட்டைதாரர்கள் 2,19,14,073 + இலங்கைத் தமிழர்

மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்கள்-19,269) செலவினத் தொகையான ரூ.2356,67,17,978/- **(ரூபாய் இரண்டாயிரத்து முந்நூற்று ஐம்பத்தாறு கோடியே அறுபத்தேழு இலட்சத்து பதினேழாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தெட்டு மட்டும்)** வழங்கியும், மேலும், பொங்கல் பரிசில் குறிப்பிடப்பட்டுள்ள பச்சரிசியை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் மூலமும் (NCCF), சர்க்கரையை தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் மூலமும் கொள்முதல் செய்திட, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"3456 – 00 - நுகர்பொருள் வழங்கல் 103 நுகர்வோர் உதவித் தொகைகள் – மாநிலச் செலவினங்கள் – AE பொது விநியோக முறை உதவியுடன் சமூகப் பாதுகாப்பு - உணவு உத்திரவாதம் 311 மானியங்கள் – 02 – பொதுவான மானியம்".
IFHRMS த.தொ.கு (3456 – 00 – 103 – AE – 31102)

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.2356,67,17,978/- 2022-2023–ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2022-2023 – ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் ஒரு சிறப்பு நிகழ்வாக கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநருக்கு பெற்று வழங்கிட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும்,மேலே பத்தில் 4-இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2022-2023 – ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள்/ திருத்த மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி ( கூ, உ. (ம) நு. பா/வ.செ.பொ-1)த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(தபிபா)

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 54470/இசெ(கபி)/நிதி (கூ,உ (ம) நு பா)த்துறை/2022 நாள். 22.12.2022 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 2110 (இரண்டாயிரத்து நூற்றுபத்து) (IFHRMS ASL No. 2022122110) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.ராதாகிருஷ்ணன்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
ஆணையாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை – 600005.
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை -600 010.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 600010.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
முதன்மை மாநில கணக்காயர். சென்னை 600 018.
மாநில கணக்காயர்(தணிக்கை). சென்னை 600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு ), சென்னை – 600 008.

<u>**நகல்**</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009,
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை
அமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச்செயலாளர், சென்னை – 600009.
பொது (ம.வா) துறை, சென்னை – 600009.
நிதி (வ.செபொ . I/II/ கூ உ (ம) நு பா/வ.வ. I) த்துறை, சென்னை – 600009.
தேசியத் தகவல் மையம், சென்னை – 600 009.
உதிரி/ இருப்புக்கோப்பு.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

22/12/2022

பிரிவு அலுவலர்

22/12/22